# தசாவதாரம் தமிழ்ப் பாடல்கள்



ஆக்கம்

வைரமுத்து கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## என்னுரை

**அன்பான பரந்தாமன் மெய்யடியார்களே!**

காக்கும் கடவுளாகிய கண்ணபிரான் அதர்மத்தை அழித்து தர்மத்தைக் காப்பதற்கெடுத்த பத்து அவதாரங்களையும் அடங்கிய சிறு நூல் ஒன்று என்கையில் கிடைத்தது அதிலுள்ள சாராம்சங்களைக் கொண்டு முத்தான செந்தமிழால் தசாவதாரம் என்னும் கும்மிப் பாடல்களை எழுதியுள்ளேன். இதிலேனும் குற்றம் குறையிருப்பின் பற்றோடு கல்விகற்று பல கலையும் பயின்ற கல்வி மான்கள் என்னை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

இங்ஙனம்
வைரமுத்து கணேசன்


வைரமுத்து கணேசன்
கலைமகள் வீதி,
வேலைக்குடியிருப்பு - 02,
கல்முனை.


12.06.2008


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தசாவதாரம் கும்மிப்பாடல்கள்

## பொருளடக்கம்


01. மச்ச அவதாரம் - 20

02. கூர்ம அவதாரம் - 33

03. வராக அவதாரம் - 18

04. நரசிம்ம அவதாரம் - 51

05. வாமன அவதாரம் - 38

06. பரசுராம அவதாரம் - 23

07. இராம அவதாரம் - 38

08. பலராம அவதாரம் - 19


09. கிருஷ்ண அவதாரம் - 13

10. கல்கி அவதாரம் - 33



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசாவதாரக் கும்மிப் பாடல்கள்



## 1. மச்ச அவதாரம்

தந்தனத் தான தன தான - தன
தான தந்தனத் தானானா
தந்தனத்தான தனதான - தன
தான தந்தனத் தானானா

01. புவனம் போற்றும் புண்ணியனே - அப்பா
புவனேஸ்வரியின் புத்திரனே
சிவனின் அருமைக் குலக்கொழுந்தாம் - செல்வக்
கணபதி பாதம் காப்பாமே

02. நீல மயில்மேல் அமர்பவனே - பக்தர்
நெஞ்சம் குளிர அருள்பவனே
சோலை மலைதேடி வாழ்பவனே - கந்தா
செந்தமிழ் நற்கவி தாருமையா

03. கலைமகளே கண் பாருமம்மா - சின்ன
கற்பனை யூற்றெனப் பாயுமம்மா
நிலையாக நாவில் குடியிரம்மா - என்றும்
நித்தம் தமிழ்க்கவி தாருமம்மா

04. பத்து அவதாரம் தானெடுத்து - அன்று
பாதகர் தன்னை வாதம் செய்த
வித்தகக் கண்ணன் புகழ்பாட - காளி
விருப்பம் என்மேல் வையுமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பாற்கடல் மீதுறை வாசவனே - ஆதி
சேடன்மேல் பள்ளிகொள்பவனே
வேற்காட்டு மாரிக்கு மூத்தவனே - அன்று
வேதத்தைக் காத்திட்ட வித்தகனே

06. காக்கும் தொழிலுக் கதிபதியே - தினம்
கருணைகாட்டும் பெரு நிதியே
நோக்கம் அறிந்து அருள்பவனே - எங்கள்
நெடியவா உன்தன் தாழ்பணிந்தேன்

07. தசாவதாரம் நீயெடுத்து - இந்த
தரணியில் செய்த அற்புதத்தை
இசையோடு கும்மியாய் நான்பாட - அப்பா
இரக்கம் என்மேல் வையுமையா

08. காயாம் பூ மேனி நிறத்தழகா - எங்கள்
கரு நீலக் கண்ணா மணி வண்ணா
மாய்கைகள் செய்து மகிழ்பவனே - எந்தன்
மனதில் வந்து அமருமையா

09. நான் முகன் உறக்கத்தில் அன்றுதித்த - வேதம்
நான்கும் காத்திட வேண்டு மென்று
மீன் அவதாரம் தானெடுத்த - வேத
நாயகா உன்புகழ் பாடுகின்றேன்

10. நித்தமும் வேத முறையறிந்து - ஒரு
நிலையில் நின்று ஆண்டுவந்த
சத்திய விரதன் என்னுமொரு - நல்ல
ராச ரிசியின் ஆட்சியிலே

11. வேதங்கள் நான்கும் தழைத்தோங்க - பெரும்
வேள்விகள் யாகங்கள் செய்கையிலே
பேதங்கள் கொண்ட அசுரர் குலம் - அதை
பொறுக்க மாட்டாமல் வாடினரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. தயவு தாட்சண்யம் இல்லாமல் - அன்று
தரணியை ஆண்ட அசுர மன்னன்
கயக்கிரீவனின் வஞ்சகத்தால் - வேதம்
களவாய்க் கவர அவன் நினைத்தான்

13. ஆணவம் மிகுந்த வல்லசுரன் - அன்று
ஆகம வேதத்தை தான்திருட
காணாத பிரளயம் வந்துவிட்டால் - அதில்
கவர்ந்து கொள்ளலாம் என்றனரே

14. ஊழி முடிவு வருமுன்னே - இந்த
உலகைக்காக்கும் பரந்தாமன்
நாழிகைகக்குள் மச்சவுருவாகி - மது
சூதனன் உண்மை பகரலுற்றார்.

15. சொத்தான வேதம் தனைக்காக்கும் - நல்ல
சொல்லின் செல்வனே வித்தகனே
சத்திய விரதா சொல்வதைக் கேள் - என்று
சாற்றினார் ஆதி நாராயணரும்

16. வஞ்சக நெஞ்ச அசுரர்குலம் - நம்ம
நாலான வேதத்தைத் தான்கவர
அஞ்சாமல் ஊழி எதிர்பார்த்து - அதை
அடையலாம் என்று காத்திருக்கார்.

17. உலகமே நீரில் மூழ்கையிலே - நான்
உண்மையடியவர் தமைக் காக்க
ஆலிலைபோல் ஓடம் அமைத்திடுவேன் - அதில்
அன்புள்ளோர் எல்லோரும் தானமர்வார்.


18. மச்சவுருவாகி நான்வருவேன் - என்
வலுவுள்ள பற்களில் வேதங்களை
அச்சமின்றி நீங்கள் கட்டிவிட்டால் - அதை
அழியாமல் நானும் காத்திடுவேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. கோபாலன் சொன்னது தப்பாமல் - கொஞ்ச
நாளிலே ஊழி வந்தவுடன்
காவலாய்ப் பாது காத்ததனை - அந்தக்
கயவர்கள் கவர்ந்து சென்றனரே

20. அச்சுதன் இதனைத் தானறிந்து - நீங்கள்
அஞ்சாதேயென்று தானுரைத்து
மச்சவுருவாக மாறினாராம் - மறு
நிமிடமே வேதத்தை காத்தனராம்

## 2. கூர்ம அவதாரம்



01. பாரளந்த மாயன் அன்றெடுத்த - மற்ற
பாற்கடல் கடைந்த அவதாரம்
கூர்ம வடிவான கதை கேட்கப் - பெண்ணே
கூட்டமாய் வந்து அமருங்கடி

02. பிரளயம் முடிந்து மறுவுலகில் - நல்ல
பெருந்தவம் செய்வோர் வாழ்க்கையிலே
இரக்ககுணமில்லா வல்லசுரர் - அன்றும்
இடைவிடாத் தொல்லைகள் செய்தனரே

03. தொல்லை பொறுக்க முடியாமல் - தேவர்
தொடர்ந்தும் துன்பம் அனுபவிக்க
எல்லை கடந்து போகிறது என்று - எல்லோரும்
நான்முகன் தாழ் பணிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. நாமொன்றும் செய்ய முடியாது - நம்ம
நாரணர் தம்மைச் சரணடைந்து
ஏனோ இத்தொல்லை என வுரைப்போம் - அவர்
ஏற்ற பரிகாரம் தேடிடுவார்.

05. தேடியே அவர்தம் தாழ்பணிந்தார் - அசுரர்
செய்யும் கொடுமை எடுத்துரைத்தார்
வாடாதீர் என்று அரவணைத்தார் - அரி
வாட்டத்தைப் போக்க வழியுரைத்தார்

06. அமுதம் கடைந்து அதையெடுத்து - நம்ம
அமரர்கள் யாவரும் உண்டுவிட்டால்
குமுதமலர் போல வாழ்ந்திடலாம் - என்றும்
குன்றாத வழமும் பெற்றிடலாம்

07. அசுரர் தலைவனை நேரில் கண்டு - நானும்
ஆனபரிகாரம் தேடுகின்றேன்
பசுபோல் சாதுவாய் இருந்திடுவீர் - உங்கள்
பற்றெல்லாம் ஒன்றாக வைத்திடுவீர்

08. ஆறுதல் சொல்லி அனுப்பிவிட்டு - அரி
அமரர் கொடுமை நீங்குதற்கு
வேறு உபாயம் இல்லையென்று - அவர்
விஷமிக்கு விஷமே அமுத மென்று

09. வலிமை கொண்ட வல்லவனே - வீரா
வல்ல அசுரர் பெருந்தகையே
பலியே எம்மோடு ஒத்துழைத்தால் - பல
நன்மைகள் பெறலாம் என்றுரைத்தார்

10. ஆமென்று பலியும் சம்மதிக்க - அரி
ஆனந்தக் களிப்பு மேலோங்க
ஓமென்று சொன்னதே போதுமென்று - சொல்லி
உற்ற வழிவகை தேடினரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. மந்தர மலையை மத்தாக்கி - பெரும்
வாசுகி தன்னை கயிறாக்கி
எந்தமுனையை விரும்புறீரோ - நீங்கள்
அந்தப் பக்கமே நில்லு மென்றார்.

12. வாலைப் பிடித்தல் நமக்கிழுக்கு - என்று
வல்ல அசுரர் தலை பிடிக்க
வாலைப்பிடித்து அமரர்களும் - நின்று
வலுவெல்லாம் காட்டி இழுத்தனரே

13. அந்தரத்தில் தொங்கும் நூல்போல - அந்த
மந்தர மலையும் தானாட
எந்த வகையாய் நிறுத்துவது - என்று
எடுத்தார் கூர்ம வடிவமது

14. ஆமை யுருவாய் உருமாறி - அரி
அடிமலை தன்னையே தான்தாங்க
தாமதமின்றி இருசாராரும் - நன்றாய்த்
தக்கபடியே இழுத்தனரே

15. வேதனை தாங்க முடியாமல் - பாவை
விஷத்தை வாயாலே தானுமிழ
ஆதரவற்று ஓடினரே - அன்று
ஆதிசிவனடி தஞ்சமென்று

16. பரம்பொருளே எம்மைக் காக்காவிடில் - இந்த
பாரிலுயிரினம் தானழியும்
அரவவிஷத்தாலே காருமென்று - சொல்லி
அனைவரும் ஒன்றாய் உரைத்தனரே

17. உங்களைக்காப்பது என்கடமை - நீங்கள்
ஒன்றுக்கும் அஞ்சாதீர் என்று சிவன்
பொங்கிவரும் விஷம் தானெடுத்து - அவர்
போகட்டும் உள்ளே யென்றுண்டனரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. விஷத்தின் தொல்லை தானீங்கி - பின்னர்
விருப்பம் போல்வந்து கடல் கடைய
வஷைப்பட்டுக்காம தேனுதிக்க - அதன்
பின்னலே ஒவ்வொன்றும் தானுதிக்க

19. அற்புதங்கள் பல தாங்கள்கண்டு - மேலும்
அலைகடல் தன்னையே தாம் கடைய
பற்றோடு கலசம் தானேந்தி - தன்
வந்திரி என்பவர் தோன்றினரே

20. கலசத்தைக் கண்டு களிப்புற்று - அசுரர்
கவர்ந்து கொண்டு போகையிலே
உலகத்தை மயக்கும் மோகினியாய் - அரி
உடனே உருமாறி நின்றனரே

21. அமுதக்கலசத்தை நீர்தாரும் - அதை
ஆளுக்குக் கொஞ்சமாய் பங்குவைத்து
இதயம் குளிர நான் தந்திடுவேன் - என்று
இயம்பினாள் மோகினி வாய்திறந்து

22. கண்டு அசுரர் அதிசயித்து - இந்த
கன்னி போல் எங்கேயும் கண்டதில்லை
உண்ணுமமிர்தம் இனிவேண்டாம் - இவள்
உறவு ஒன்றே போதுமென்றார்

23. ஆளுக்கொருதுளி நான்பகிர - இப்போ
ஆவலாய் நானும் வந்தேனென்று
கொழுகொழு பேச்சிலே பேசினதும் - அந்தக்
கொடிய அரக்கர் மயங்கினரே

24. உன்கையால் ஒருதுளி உண்டால் போதும் - இந்த
உலகம் அழிந்தாலும் நாமழியோம்
கண்ணேயுன் கையாலே தாருமடி - என்று
கலசம் தன்னைக் கொடுத்தனரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. வரிசையாய் இருசாரும் தானமர - கன்னி
வருகிறாள் கலசம் கையேந்தி
கரிசனையாய் தேவர் வரிசையிலே - அந்தக்
கன்னியமுதம் பகிர்ந்தனரே

26. கன்னிமேல் மோகம் கொண்டிருக்கும் - அந்தக்
கயவர்கள் எக்கேடு கெட்டாலும்
அன்போடு அமுதம் தான்வாங்க - அந்த
அமரர் வரிசையில் போயமர்வோம்

27. தந்திரமாக உருமாறி - நல்ல
தர்மதேவர்கள் போலாகி
வந்தாரே இரண்டு வல்லசுரர் - தேவர்
வரிசை தன்னைத் தான்தேடி

28. வந்தவர் அமுதம் தான்வாங்கி - அதை
வாயார உண்கின்ற வேளையிலே
சந்திரர் சூரியர் தானறிந்து - மெள்ளச்
சாற்றினார் அரியின் காதோரம்

29. ஆத்திரம் கொண்டு அரிசீறி - அவர்
அந்தக்கணமே தலையறுக்க
பூத்த மலர்போல் முகம்மலர - உயிர்
போகாமல் அப்படி நின்றதுவே

30. போகாதுயிரெனத் தாமறிந்து - அரி
போட்டாரே மற்றொரு திட்டமது
ராகுகேது எனும் கிரகம் - நீங்கள்
சந்தோசமாக வாழுமென்றார்

31. அமரர் வரிசை தான் முடிகையிலே - அந்த
அமிர்தக் கலயமும் தான்முடிய
ஏமாந்து போனோமே என்று சொல்லி - அசுரர்
எல்லோரும் போருக்கு வந்தனரே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. மைத்துனர்மாய மோகினியாய் - நல்ல
வடிவு கொண்டதைத் தான்பார்க்க
பித்தனார் வந்து கண்டுகொண்டு - மெத்தப்
பிரமைகலங்கி நின்றாராம்

33. கூர்ம அவதாரம் தானெடுத்து - அரி
குவலயம் காத்த பெருமை தன்னை
ஆராய்ந்து கொஞ்சம் பாடித்தோமென்று - இப்போ
ஆரணங்கேகும்மி கொட்டுங்கடி

## ௩. வராக அவதாரம்



01. வராக அவதாரம் தானெடுத்த - ஆதி
நாரணா உன்புகழ் நான்கூற
பரலோக கர்த்தாவே மனமிரங்கி - நல்ல
பண்பான நற்கவி தாருமையா

02. காசிபர் மாயையைக் கலந்ததினால் - அன்று
கருணையேயின்றி உருவாகி
நாசச் செயலுக்கு அஞ்சாத - கெட்ட
இரணியனும் அவன் தம்பிமாரும்

03. அதிக பலம் கொண்டு உலகேழும் - பெரும்
அட்டகாசம் பல செய்கையிலே
சதிகாட்டி தேவர் தனைவிரட்டி - அவர்
சண்டைக்கு ஆள்தேடி திரிகையிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. கருணையுள்ளம் படைத்தவனாம் - அந்த
விபாரி என்னும் தேவனவன்
வருண நகரை ஆழ்கையிலே அசுரர்
வந்தார் அவனுடன் சமர்பொருத

05. என்னுடன் யுத்தம் நீசெய்தால் - உனக்
கெந்தப் பெயருமே கிட்டாது
கண்ணான வைகுந்த வாசவன்தான் - நீ
காட்டும் பலத்துக்கு ஏற்றவனாம்

06. வைகுந்த வாசவன் எங்கிருக்கான் - அவன்
வாழ்பதிதேடி நான்போறேன்
கைக் கதையாலே இடுப்புடைத்து - இன்று
காட்டுவேன் எந்தன் சமர்த்தை என்றான்

07. எங்கே ஒழித்தாலும் நான்தேடி - அவனை
இல்லாதொழித்துமே வெற்றி கொண்டு
மங்காமல் எங்கள் குலம் காப்பேன் - என்று
மார்தட்டி வைகுந்தம் போனானே

08. போகும்வளியிலே நாரதரும் - அவன்
போகும் திசை நோக்கித் தான் வரவே
ஏகுமிடமெங்கே போர்வீரா - என்று
ஏற்ற குசலம் வினவினரே

09. வைகுந்த லோகம் நான்போறேன் - அங்கு
வாழும் நாராயணன் தனைக் கொல்ல
கைப்புயம் தோன்றின வெடுக்கிறது - அவனை
கண்ட துண்டமாக வெட்டு என்று

10. அங்கே அவரை நீ காணமாட்டாய் - அவர்
ஆழிக்கடலுக் கடியில் நின்று
எங்கும் சமமாய் புவியிருக்க - அவர்
ஏற்ற வராக உருவெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கூரிய கொம்பால் அதைத்தூக்கி - இப்போ
கொண்டு வந்து அவர் சேர்ந்திருப்பார்
நேராக அங்கே நீர்போனால் - வீரா
நிச்சயம் வெற்றி கண்டிடலாம்

12. உண்மையைச் சொல்லிய நாரதரே - உன்னை
ஒன்றுமே செய்யாமல் விட்டுவிட்டேன்
என்னெண்ணம் நிறைவேற்றிக் காட்டுகிறேன் - என்று
இறுமாந்து போருக்குச் சென்றானே

13. வைகுந்த வாசனைக் கண்டுகொள்ள - அவன்
வாடாநீ போருக்கு என்றழைத்து
கைதட்டி மார்தட்டி கோசமிட்டு - உன்னை
கதையாலே இன்று ஒழிப்பேனென்றான்

14. பாட்டன் பிரமன் படைத்துவைத்த - இந்தப்
பாரெல்லாம் எமக்கு சொந்தமடா
காட்டுப் பன்றியுருக் கொண்டவனே - அரி
காட்டடா உன்தன் பலத்தையென்றான்

15. ஆணவம் கொண்டு நீ பேசாதே - இன்று
அழியும்காலம் வந்ததடா
காணாத எமலோகம் காணப்போறாய் - என்று
கடுமையாய் இருபேரும் தான் பொருதி

16. மலைபோலரக்கனும் தான்கெளிந்து - அவன்
மாண்டுமடிந்து சவமானான்
தலைவேறு உடல்வேறு கூறாக்கி - அரி
தர்மம் தன்னைக் காத்தனரே

17. இரணியன் தம்பியை தனையழித்து - இனி
இன்பமாய்த் தேவர் வாழ்வதற்கு
வராக அவதாரம் தானெடுத்து - அன்று
வாழவழியும் வகுத்தனரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. வராக அவதாரம் தானெடுத்து - மாயோன்
வாழ்விக்கச் செய்த சிறப்புக்களை
தெரிந்த வகையில் நாம்படித்தோம் - என்று
தோகையரே கும்மி கொட்டுங்கடி

## 4. நரசிம்ம அவதாரம்



01. தம்பி இரணி யாசன்தானொளிந்தான் - என்று
தவித்துக் கொதித்து இரணியனும்
வெம்பியழுது புரண்டெழுந்து - அவன்
வேதாவைப் பழிதீர்க்கத் தானினைத்து

02. நினைத்ததை நிறைவேற்ற வேண்டுமென்று - அவன்
நிகரில்லாப் பெருமதவம் செய்யவெண்ணி
அனைத்தும் படைக்கும் பிரமனையே - நோக்கி
ஆனபெரும் தவம் செய்தனனே

03. செய்த தவத்தால் மனமகிழ்ந்து - பிரமா
தேவரே கேளென முன்தோன்றி
உய்ய வழியின்று வந்ததென்று - அவன்
உரைத்தான் தனது கோரிக்கையை

04. அன்போடு உன்தன் அடிபணிந்தேன் - எந்தன்
ஆதி முதலேயென் பாட்டனாரே
என்று மனியாமல் நானிருக்க - நல்ல
ஏற்றவரம் நீர் அருள வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. கேட்டவரமெல்லாம் நானளித்தேன் - என்று
கெதியிலே பிரமன் தான்கூறி
விட்டு அகன்றுமே போனபின்பு - அவன்
வேண்டாத செயலெலாம் செய்தனனே

06. உலகிற்கு நானே முதற் கடவுள் - இனி
உலகத்து மாந்தர் எனைத் துதித்தால்
பலபல நன்மைகள் ஈந்திடுவேன் - நீங்கள்
பாசமாய் என்நாமம் நாவுரைப்பீர்

07. இரணிய நாமோவென்று கூறாவிட்டால் - நாவு
இருந்த இடத்தில் இருக்கா தென்று
தெரிவித்து தேவரைத் தானடக்கி - அவன்
தேவை போலாட்சி புரிகையிலே

08. துன்பக்கடலில் மிக நீந்தித் - தேவர்
செய்வதறியாமல் தான்வெதும்பி
அன்போடு பரந்தாமன் அடிபணிந்து - அவன்
அடக்கு முறையெல்லாம் தானுரைக்க

09. திருவிழி திறந்து எம்பெருமான் - புன்
சிரிப்போடு பூலோகம் தான்பார்த்து
அருளினார் இனி அஞ்சத் தேவையில்லை - நான்
ஆணபரிகாரம் தேடுகின்றேன்

10. அஞ்சாமல் நீங்கள் போய்வாரும் - அவன்
அழியும் காலம் வந்திருக்கு
வஞ்சக நெஞ்சனை நானழிக்க - வெகு
விரைவில் வருவேன் எனவுரைத்தார்

11. இரணியன் புத்திரன் நால்வரிலே - ஒன்று
இரக்க குணமுடன் தான்வளர
தரணியில் தோன்றுமுன் நாரதரும் - அவன்
காதிலுபதேசம் செய்து வைத்தார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. அரியோம் நாமோவென்ற மந்திரத்தை - பையன்
ஆழமாய் உள்ளே தான் துதித்து
பரிவோடு வளரும் நாளையிலே - தந்தை
பாலகன் கல்வி தான்பயில

13. குருவையழைத்து உபதேசம் - நீங்கள்
கொடுங்களென்று தானுரைக்க
உருக்கமாய் இரணிய நமோ வென்று - சொல்லி
இறைவணக்கமும் செய்யு மென்றார்

14. இறைவனின் நாமத்தைக் கூறாமல் - குரு
ஏதேதோ சொல்கிறார் என்று எண்ணி
மறை கூறும் நாமம் நாராயணா - என்று
நல்லபடியவன் எடுத்துரைக்க

15. தந்தையின் நாமத்தைக் கூறாமல் - தம்பி
எந்தவோர் நாமமும் கூறாதே
இந்தவிஷயம் அவனறிந்தால் - தம்பி
என்ன நடக்குமோ நானறியேன்

16. கல்வியைப் போதிக்கும் என்குருவே - நீங்கள்
கற்றது எல்லாம் இதுதானா
நல்லது கெட்டது நன்கறிந்து - அல்லோ
நல்லபடி கல்வி புகட்டிடுவீர்

17. உலகெலாம் உன்தந்தை தெய்வமென்று - தானே
உலகத்து மாந்தர்கள் தான் வணங்க
ஆலிலை வாசவன் தெய்வமென்று - நீயும்
அறியாமல் இப்போது உளறுகின்றாய்

18. ஒருமுறையேனும் மனம்திறந்து - தம்பி
உன்தந்தை நாமத்தைக் கூறாவிட்டால்
குருவென்றும் பாராமல் அழித்திடுவான் - என்மேல்
கொஞ்சம் மனது இரங்குமடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. வழிகாட்டும் குருவே வழிதவறி - நீங்கள்
வரம்பு தப்பிப் பேசாதீர்
அழித்தாலும் அரியன்றி யோர்வார்த்தை - ஐயோ
ஆசைக்கும் நான் பேசமாட்டேன்

20. இறந்தாலும் அரிநாமம் நான்மறவேன் - ஐயா
இதற்குமேல் நீரும் உரையாமல்
சிறப்பெல்லாம் பெற்ற பெருந்தகையே - நீரும்
சொல்லுவாய் நாராயணன் நாமம் என்றான்

21. குருவுக்கே உபதேசம் தானுரைக்கும் - சின்ன
குழந்தை மொழியைத் தான்கேட்டு
வருத்தம் மிகுந்து குருவாடிச் - சென்று
வகுத்த விதமெலாம் உரைத்தனரே

22. கண்ணில் நெருப்புப் பொறி பறக்கப் - பெரும்
கர்ச்சனை செய்து இரணியனும்
மண்ணிலுதைத்து மருண்டுமவன் - அந்த
மால் நாமம் சொன்னவன் எங்கேயென்றான்

23. கண்கண்ட தெய்வமே நீர்கேளும் - நாங்கள்
கனவிலும் அவன் நாமம் கூறமாட்டோம்
என்ன கெடுங்காலம் வந்ததென்று - அவன்
இப்படிச் சொல்கிறான் நானறியேன்

24. அன்பு மகனே பிரகலாதா - நீ
அறியாத பாலகன் தானல்லவோ
என் நாமம் கூற ஏன் தயக்கம் - நான்
எல்லோர்க்கும் தெய்வமென்றெண்ணிடடா

25. உன்னையும் என்னையும் மட்டுமல்ல - இந்த
உலகங்கள் எல்லாம் தான்படைத்து
கண்போலக் காக்கும் பரந்தாமன் - அப்பா
கண்கண்ட தெய்வமென் றறியாயோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. இன்னுமொருமுறை அவன் நாமம் - அடே
என்காது கேட்க நீயுரைத்தால்
கண்டதுண்டமாக வெட்டிடுவேன் - உன்னை
காக்கை கழுகுக் கிரையாக்கிடுவேன்

27. தம்பியைக் கொண்ட பாதகன்டா - அவன்
தலையைக் கொய்ய நானிருக்கேன்
தம்பியே அவன் நாமம் கூறாமல் - நீயும்
தந்தையின் நாமத்தைக் கூறுமடா

28. எனக்குப்பயந்தவன் பாற்கடலில் - தம்பி
என்றோ ஒளித்தவன் இன்றுமில்லை
உனக்குப் பித்தம் பிடித்ததடா - அடே
உரையடா எந்தன் நாமம் என்றான்

29. கோடிமுறை நீங்கள் சொன்னாலும் - அப்பா
கோபாலன் என்றும் நம்மைவிட்டு
ஓடி ஒழித்து மறையமாட்டார் - என்று
உறுதியாய் நீயும் நம்புமப்பா

30. குடியைக் கெடுக்கவே வந்துதித்த - இந்த
கோடாரிக் காம்பை இப்போதே
அடித்துக் கொல்ல வேண்டுமடா - என்று
ஆவேசமாக வுரைத்தனனே

31. எதிரியைப் புகழ்ந்து போற்றுதற்கு - அடே
எனக்கு மகனாய்ப் பிறந்தவனே
விதியை முடிக்கின்றேன் பாருமடா - இந்த
விசத்தைக் குடியடா என்றுரைத்தான்

32. அரியை மனதிலே தானினைத்து - அந்த
ஆலகால விஷம் தனைவாங்கி
மரித்தாலும் உன்னாமம் நான்மறவேன் - என்று
மனமாவென்று குடித்தனனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. குடித்துமுயிரோடிருக்கக் கண்டு - தந்தை
கோபம் கொண்டுமே ஆர்ப்பரித்து
மடியாமல் இருக்கிறான் இவனைக் கொண்டு - இந்த
மலையில் வைத்து உருட்டுமென்றான்

34. அதற்கும் மீறி அவனிருந்தால் - நீங்கள்
ஆக்கினை செய்து அழித்தவனை
எதற்கும் அஞ்சாமல் ஒழித்திடுங்கள் - அவன்
எனக்கு மகனில்லை என்றுரைத்தான்

35. பழிக்கஞ்சா அசுரர் பாலகனைக் - கொல்ல
படாத பாடெல்லாம் பட்டாலும்
அழிக்க முடியாது அவனை என்று - வந்து
அங்கம் நடுங்க உரைத்தனரே

36. படைக்கலம் எல்லாம் பலிக்குதில்லை - சுவாமி
பாறாங்கல்லும் நசுக்குதில்லை
இடைவிடா அரிநாமம் கூறுகின்றான் - ஐயோ
இவனைக் கொல்ல முடியுதில்லை

37. எங்கேயடா அந்த மாபாவி - அவனை
இப்போதே என்முன்னே கொண்டுவாடா
தங்குதடையின்றி நானழிப்பேன் - இந்த
தரணியை விட்டு அவன் ஓட

38. அறியாத சிறுபிள்ளாய் பாலகனே - உனக்
கறிவு கொஞ்சமும் இல்லையடா
புரியாமல் அவன் நாமம் கூறுகின்றாய் - அவன்
போருக்குப் பயந்து போனவன்டா

39. காக்கும் கடவுள் பரந்தாமன் - அப்பா
காரணமின்றிப்போர் செய்யமாட்டார்
நோக்கம் நமையெல்லாம் காப்பதுதான் - என்று
நெஞ்சிலுறுதியாய் நம்புமப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. கண்ணுக்கு முன்னாலே நானுமிப்போ - அடே
கண்கண்ட தெய்வமாய் நானிருக்க
என்னை மதியாமல் அரியென்றாய் - அவன்
எங்கே என்று நீ காட்டுமடா

41. உண்ணும் உணவிலும் அவரிருப்பார் - அப்பா
உறங்குமிடத்திலும் அவரிருப்பார்
தூணிலும் கூட அவரிருப்பார் - சின்ன
துரும்பிலும் கூட அவரிருப்பார்

42. காட்டடா இந்தத் தூணினிலே - உந்தன்
கடவுள் எங்கே இருக்காரென்று
ஓட்டுவேன் என்று இரணியனும் - தூணில்
ஓங்கி உதைத்தான் பலம் கொண்டு

43. உதையோடு தூணிரு கூறாக - அதன்
உள்ளேயிருந்து பரந்தாமன்
வதை செய்யும் நரசிங்க கோலமதாய் - அவர்
வந்து உதித்தார் இரணியன் முன்

44. வாரிப்பிடித்து இழுத்தணைத்து - அவன்
வாசல்படியிலே கொண்டு வைத்து
கூரிய நகத்தால் கூறாக்கி - அவன்
குடலைப் பிடுங்கி வீசினாரே

45. உதிரம் குடித்து வெறிகொண்டு - அரி
உக்கிரம் கொண்டு நிற்கையிலே
அதிசயம் கண்டு தேவர்களும் - அப்போ
ஆனந்தக் கூத்தும் ஆடினரே

46. அழிந்தான் இரணியன் எனமகிழ்ந்து - அந்த
அமரர் முனிவர் ரிசிகளெல்லாம்
பொழிந்தார்கள் பூமழை வானில்னின்று - இனி
பொன்னான வாழ்வு நமக்கே என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. சின்னஞ்சிறுவனாய் நீயிருந்தும் - உந்தன்
சிந்தனையிலென்னை வைத்ததினால்
அன்போடு நானும் அகமகிழ்ந்தேன் - இனி
ஆனவரமெல்லாம் கேளுமென்றார்

48. எந்தவரமும் நான் வேண்டேன் - சுவாமி
என்றுமுன்னாமம் மறவாமல்
சிந்தனை தன்னிலே நீயிருந்தால் - சுவாமி
சிறியேனுக்கது ஒன்றேபோதுமென்றான்

49. என்னருள் என்றும் உனக்கு உண்டு - தம்பி
எந்தக் கவலையும் இல்லாமல்
மனுநீதி தப்பாமல் ஆட்சிசெய்து - நீயும்
மக்களை ஆண்டு வருகவென்றார்


50. சொன்ன சொல் தவறாமல் பிரகலாதன் - தன்
சொந்த பந்தம்போல் அத்தனையும்
தன்னுயிர்போல மன்னுயிரும் - காத்து
தரணிவாழ் மக்களை ஆண்டு வந்தான்

51. நரசிங்க அவதாரம் தானெடுத்து - அரி
நடத்திய அற்புதம் இன்னதென்று
அறிந்தவகையில் நாம்படித்தோம் - என்று
ஆனந்தக் கும்மி கொட்டுங்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. வாமன அவதாரம்



01. மாபலிச்சக்கர வர்த்தியென்னும் - ஒரு
மகாபலசாலியின் ஆட்சியிலே
வாமன அவதாரம் எடுத்தகதை - கூற
மாயவாயிப்போ அருள் புரிவாய்

02. மூவுலகெல்லாம் ஆளவென்று - அன்று
முனிவர் ரிசிகளைத் தானழைத்து
வேதமுறையைக் கையாண்டு - பெரும்
வேள்விகள் செய்து வெற்றிகண்டு

03. தேவேந்திரனையும் அடிமைகொள்ள - அங்கு
தேடியேபோருக்குச் செல்கையிலே
தேவேந்திரனும் அறிந்து கொண்டு - வேறு
செய்யும் வழிவகை தேடினானே

04. அசுரபலத்துக்கு ஈடாக - இன்று
அமரர் பலமில்லை என்றறிந்து
நசுபட்ட கரும்பாக இந்திரனும் - மனம்
நலிந்து வழியும் தேடலுற்றான்

05. வியாழபகவானைத் தானாடி - அவன்
விண்ணவர் குறையைத் தானுரைக்க
அயலவன் பலத்தால் உன்னாடு - இனி
அசுரனுக்கடிமை என்றுரைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. போர் செய்து புறம் காட்டிப்போகாமல் - நீயும்
போருக்குமுன்னே மறைவிடத்தில்
யாருக்கும் தெரியாமல் மறைந்திருந்தால் - பின்பு
நியாயமொன்று பிறந்திடுமே

07. குருபுத்திகேட்டுமே இந்திரனும் - சில
குறிப்பிட்ட தேவர்கள் தன்னோடு
உருமாறிப் போகிறேன் என்று சொல்லி - தன்
இந்திரலோகம் விட்டகன்றானே

08. இந்திரலோகம் மாபலிக்கு - எந்த
இடையூறும் இன்றிக் கைவரவே
தொந்தரவு தொல்லை மேலோங்க - தேவர்
சொல்ல வொண்ணாத்துயர் கொண்டனரே

09. தேவர்துயரைக் கண்டு அந்த - தேவ
மாதெனும் அதிதி யம்மா
யாவர்க்கும் துன்பம் வாராமல் - காக்க
நல்ல வழியொன்று புகலுமென்று

10. கண்ணான கணவர் காசிபர்முன் - அந்தக்
காரிகையாளும் முறையிடவே
எண்ணம் நிறைவேற வேண்டுமென்றால் - பெண்ணே
ஏற்ற வழியொன்று சொல்லுகின்றேன்

11. பங்குனிமாதம் அகிலபட்சம் - அதில்
பன்னிரு நாட்களில் ஓர்விரதம்
எங்கும் நிறைந்த பரந்தாமன் - அருள்
எண்ணம் போல் பெற்றிட நல்லதம்மா

12. பயோவிரதம் நீயிருந்தால் - அந்தப்
பாற்கடல் வாசன் மனமகிழ்ந்து
உபாயமொன்று தாண்டுப்பார் - அது
உலகுக்கு நன்மை பயக்கும் மென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. கணவனுரையைத் தான்கேட்டு - அந்தக்
கற்புள்ள தேவ மாதாவும்
மனதுக்குள் மாயோனைத் தானிருத்தி - அவர்
மகிழ்ந்து விரதம் நோற்கையிலே

14. அரவத்தின் மீது பள்ளிகொள்ளும் - அந்த
ஆதிநாராயணன் தானுணர்ந்து
வரமருள வேண்டுமென்று - அவர்
வந்து அதிதிமுன் தோன்றினரே

15. உந்தன் மனக்குறை நானறிவேன் - அம்மா
உம்பர் படுதுயர் தானீங்கே
உந்தன் வயிற்றிலே நான்பிறப்பேன் - இந்த
உலகிற்கு நல்வழி காட்டுதற்கு

16. தேவரகசியம் தாயாரே - இதை
தெரியாமல் யாருக்கும் கூறாதே
ஆவது நம்பணி தீர்ந்துவிட்டால் - அது
அப்புறம் சொன்னாலும் தேவையில்லை

17. கேட்டு அதிதி மனமகிழ்ந்து - அப்பா
கேசவா உனக்கு ஈடேது
நாட்டம் என்மீது கொண்டதற்கு - அப்பா
நானுந்தன் பொற்பாதம் போற்றுகின்றேன்

18. நாரணர் விடைபெற்றுப் போனபின்பு - அந்த
நாயகி காதல் மேலோங்க
ஆரத்தழுவியே காசிபரை - அந்த
அம்மையார் கர்ப்பம் ஆயினரே

19. மாதமும் காலமும் தான் நெருங்க - சிசு
மண்ணிலே வந்து தான்பிறக்க
வேதாவே குழந்தையாய் வந்துதித்தார் - என்று
வேண்டித்தொழுது நிற்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. உள்ளம் குளிர முகம்பார்த்துப் பையன்
உலகமே என்னுள் அடக்கமென்று
குள்ளவடிவாக மாறினாராம் - அரி
கொஞ்சநாள் இப்படித்தானிருக்க

21. இப்படி இருக்கும் நாளையிலே - அந்த
இறுமாப்புக் கொண்ட மாபலியும்
தப்பாமல் யாகம் தானடத்தி - பெரும்
தட்சணை தர்மம் செய்கையிலே

22. குள்ளவடிவான வாமனரும் - அவன்
கொடுக்கும் தானம் பெறுவதற்கு
மெள்ளநடந்து சென்றாராம் - அரி
விருப்பம் போல்தானம் பெறுவதற்கு

23. பொன்னும் பொருளும் நான் வேண்டேன் - மன்னா
கோடித்திரவியம் நான் வேண்டேன்
என்காலால் மூன்றடி மண்வேண்டும் - என்று
எண்ணத்தை அப்போது சொன்னனரே

24. எனக்காக எத்தனை உலகிருக்க - நீர்
ஏனையா மூன்றடி மண் கேட்டாய்
உனக்காகத் தருகிறேன் என்று சொல்லி - தண்ணீர்
எடுத்துத் தாரை வார்க்கையிலே

25. சுக்கிராச்சாரி இடைமறித்து - மன்னா
சொல்வதைக் கொஞ்சம் கேளுமப்பா
சிக்கலில் மாட்டத் துணிந்துவிட்டாய் - இந்த
சின்ன உருவத்தை நம்பாதே

26. சொன்ன சொல் என்றும் மாறிவிட்டால் - எந்தன்
சொல்லேயென்றும் பலிக்காது
என்னதான் வந்தாலும் நான் மாறேன் - என்று
எடுத்தான் கிண்டியை நீர்வார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. ஆபத்தில் மாபலி மாட்டிவிட்டான் - என்று
அறிந்த சுக்கிராச் சாரியாரும்
தாமதமின்றியே வண்டாகிச் - சென்று
தண்டின் துவாரத்தைத் தானடைக்க

28. அப்போதே அதனைத் தானுணர்ந்த - அந்த
ஆதி நாராயணன் சூட்சமதாய்
தெப்பையெடுத்துக் குத்தினாராம் - கண்ணில்
தெறித்துச் சுக்கிரன் வெளியேற

29. தாரை வார்த்தான் மாபலியும் - இனித்
தந்தேனுனக்குத் தானமென்று
அரைநொடி தன்னிலே பேருருவாய் - அரி
அழந்தார் ஆகாயம் ஓரடியாய்

30. மற்றையடியை எடுத்துவைக்க - இந்த
மண்ணுலகெல்லாம் தானடங்க
ஒற்றையடிக்கி இடமெங்கே - என்று
உரைத்த வார்த்தை தனைக்கேட்டு

31. மாதவா என்தலை தான் பாக்கி - அதில்
வைத்திடும் பாதம் எனவுரைக்க
அதல பாதாளம் சேருமென்று - அரி
அழுத்தினார் மாபலி தானடங்க

32. தானம் கொடுப்பதால் பெரும்கேடு - பின்
தனக்கே வருமென்றறிந்திருந்தும்
வானமழிந்து போனாலும் - தன்
வாக்கை நிலை நாட்டிக் கொண்டதினால்

33. பாதாள லோகம் தனையாண்டு - பல
பாக்கியம் தன்னோடு வாழ்கவென்று
வேதநாராயணர் அருள் வழங்கி - பின்
வேண்டும் வழிவகை தேடினரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. இந்திரன் தன்னை தானழைத்து - இனி
இன்பமாய் உன்நாடு ஆழ்க வென்று
எந்த இடையூறும் நேராமல் - யாகம்
இனிதே நிறைவேற்ற வேண்டுமென்றார்

35. பக்கச்சார்பின்றி நானிருப்பேன் - இனி
பகையே நெஞ்சில் வையாமல்
சுக்கிராச்சாரியார் யாகமதை - எந்தக்
குறையுமில்லாமல் பூர்த்தி செய்ய


36. என்று மாயவன் பகர்ந்துவிட்டு - இனி
என் வேலை முடிந்தது என்று சொல்லி
அன்போடு எல்லோரும் வாழ்கவென்று - அவர்
அப்போதே தன்பதி சேர்ந்தனரே

37. வாமன அவதாரம் தானெடுத்து - அந்த
மமதை கொண்ட மாபலியை
பாதாளம் வரைக்கும் ஆழ்த்திவிட்ட - எங்கள்
பரந்தாமா உன்புகழ் நானுரைத்தேன்

38. என்ன பிழை தப்பு இருந்தாலும் - அப்பா
எல்லாமும் நீயே பொறுத்தருளி
அன்போடு என்மேல் கருணை கொண்டு - இனி
அடுத்த அவதாரம் கூறவைப்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. பரசுராம அவதாரம்



01. தந்தைசொல் காத்திட வேண்டுமென்று - அன்று
தமையன்மார் ஐவரில் இளையவனாய்
வந்து உதித்த அவதாரம் - தன்னை
வாசவா கும்மியாய் பாடுகிறேன்

02. ஜதமக்கினி என்னும் மாமுனிக்கும் - அவர்
பத்தினி ரேணுகா அம்மையார்க்கும்
புதல்வனாய் வந்து புவியாண்ட கதை
புருசோத்தமா இப்போது கூறுகின்றேன்

03. பரசுராமரென்ற நாமம் பெற்று - இந்த
பாரினில் செய்த அற்புதத்தை
காரணத்தோடு நான்பாட - எந்தன்
கருத்தில் வந்து அமருமையா

04. கோடரி ஆயுதமாகக் கொண்டு - பெரும்
போர்செய்து வெற்றி பலகண்ட
ஆடவர் பெருமான் தன்கதையை - நல்ல
அழகு தமிழாலே பாடிடுவோம்

05. எத்தனையோ யாகம் பூர்த்தி செய்து - அன்று
இன்பமாய் வாழ்ந்திட்ட மாமுனிக்கு
நித்தமும் ஆற்றங் கரைதேடிப் - பாவை
நிறைகுட நீர் மொள்ளப் போகையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. கங்கைக் கரையை அவளடைந்து - அங்கு
கண்டகளிப் பூட்டும் காட்சியினால்
மங்கை மறந்து நினைவிழந்து - அங்கே
மயக்கம் கொண்டு நின்றனளே

07. செந்தன் என்னும் ஓர் மன்னன் - தன்
தேவகன்னியர் தங்களுடன்
அந்த நதியில் நீர் ஆடியதைக் - கண்டு
அங்கே மையலில் நின்றனளே

08. பித்தம் தெளிந்து நினைவுவர - ரேணு
பிடித்த குடத்தில் நீரெடுத்து
வந்தாள் இருப்பிடம் தனைநோக்கி - அந்த
வனிதை மையல் மேலோங்க

09. மங்கையவள் பார்க்கும் பார்வையிலே - அவள்
மனது கொண்ட கோலத்திலே
எங்கோ இவள் மனம் போனதென்று - முனி
எண்ணக்கருத்தை அறிந்து கொண்டு

10. ஐந்துபேர் மக்களும் வாருமடா - உங்க
அன்னையின் தவறைப் பாருங்கடா
வந்தது மாபெரும் தொல்லையடா - இனி
வாழநினைப்பது பாவமடா

11. எந்த வழிவகை யானாலும் - மக்காள்
இப்போதே இவளைக் கொல்லுமடா
சிந்தனை ஏதேனும் வையாமல் - தம்பி
சீக்கிரம் இதனைச் செய்யுமடா

12. மூத்தவனும் மற்ற மூன்றுபேரும் - நாங்கள்
முலைதந்த தாயைக் கொல்லோமென்று
தந்தையே எங்களால் தொல்லையென்றால் - நாங்கள்
தாமதமின்றி உயிர் விடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. கடைசி மகனைத் தானோக்கி - முனி
கண்ணில் நெருப்பும் பொறிபறக்க
உடைந்த சிலைபோல் நிற்காமல் - இனி
உன்சித்தம் என்ன எனவினவ

14. தந்தை சொல்மிக்க மந்திரமே - இந்தத்
தரணியிலில்லை எனவுணர்ந்து
பந்தபாசமொன்றும் பாராமல் - பர
சுராமர் வெட்ட முனைகையிலே

15. மகனின் கையாலழியாமல் - இனி
மாய்க்கின்றேன் எந்தன் உயிரை யென்று
திக்கற்று தாயவள் ஓடுகையில் - அவர்
துரத்திச் சென்று பின் தொடர்ந்து

16. கோடாரி தன்னைத் தானெடுத்து - அவர்
கொஞ்சமும் இரக்கம் இல்லாமல்
சாடியே கழுத்தை வெட்டிவிட்டு - வந்து
தந்தையின் பாதம் பணிந்தனரே

17. அஞ்சாத சிங்கம் பரசுராமா - எந்தன்
ஆணை நிறைவேறி விட்டதடா
நெஞ்சம் குளிர்ந்து இருக்கையிலே - மகன்
நினைத்த வரத்தைக் கேளுமடா

18. எந்த வரமுமே நான் வேண்டேன் - அப்பா
என்தாய் மட்டும் உயிர் பிழைத்து
வந்தாலே போதும் மனமகிழ்வேன் - என்று
வாழ்த்தி வணங்கி நான் வேண்டுகிறேன்

19. தந்தேன் மகனே நீ கேட்டவரம் - உந்தன்
தாயேயிப்போ உயிர்பிழைக்க
இந்தக் கமண்டல நீர்தெளித்து - நானும்
இப்போதே உயிர் பெறச் செய்திடுவேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. என்று கமண்டல நீரெடுத்து - முனி
ஏற்றவுருவோடு தான் தெளிக்க
கண்ணுறுமுறங்கி விழித்ததுபோல் - அந்தக்
காரிகை உயிர் பெற் றெழுந்தனளே

21. கணவனின் பாதம் அவள் பணிந்து - எந்தன்
கடவுளே மன்னிக்க வேண்டுமென்று
மகனையும் வாரி அணைத்தெடுத்து - அன்னை
மகிழ்ந்து முத்தம் இட்டனளே

22. தாயென்றும் பாராமல் கொலை புரிந்து - அன்று
தந்தையின் ஆணை நிறைவேற்றி
ஓயாமல் தீர்த்த யாத்திரைக்கு - அவர்
ஒப்பான அவதாரம் இன்னதென்று

23. அறிந்தவகையில் நாம் படித்தோம் - என்று
அரியின்பாதம் நாம்பணிந்து
திறந்த மனத்தோடு உற்றுநோக்கி - நாமும்
சிறந்த தமிழ்க் கும்மி கொட்டிடுவோம்

## 7. இராம அவதாரம்



01. பலராம அவதாரம் தான்முடித்து - அரி
பாம்பணைமேலே துயில்கையிலே
காலம்கடந்து போகு தென்று - அவர்
கண்விழித்தெழுந்த வேளையிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. ஆதிமகாலெட்சுமி அம்மையாரும் - அந்த
அதிசயம் தன்னைத் தானறிந்து
சோதிவடிவேநீர் எழுந்திருந்த - இந்த
சூட்சுமம்தன்னை உரையுமென்றார்

03. ஒருவனுக் கொருத்தி என்பதனை - இந்த
உலகமானிடர் தானுணர
ராம அவதாரம் நானெடுக்க - இப்போ
தரணிக்குச் செல்ல விரும்பியுள்ளேன்

04. அவதாரம் என்றுநீர் போயிடுவீர் - ஆனால்
அடியாள்துயரை அறியமாட்டீர்
ஏவல் செய்யவேணும் நான்வருவேன் - சுவாமி
என்னைவிட்டுநீர் போகாதீர்

05. சொல்லுக்கு மன்னர் ஜனகரிடம் - நீயும்
சோதிவடிவாகத் தோன்றிடுக
வில்லையொடுத்து மணம்புரிந்து - உன்னை
விருப்பம்போல் என்னோடு சேர்த்திடுவேன்

06. சங்கு சக்கரம் ஆதிசேசன் - எல்லாம்
தன்னோடு தோன்ற வேண்டுமென்று
எங்கும் நிறைந்த பரந்தாமன் - ராம
அவதாரம் பற்றிப் பாடிடுவோம்

07. அயோத்தி மன்னர் தசதராக்கும் - அவர்
அன்பு மனைவிமார் மூவருக்கும்
புத்திரபாக்கியம் இல்லாமல் - மனம்
புளுங்கி வெந்து இருக்கையிலே

08. குலகுருவான வசிட்டரிடம் - சென்று
குறையைச் சொல்லி முறையிடவே
கலங்க வேண்டாம் மன்னவனே - யாகம்
கட்டாயம் செய்தால் பயனடைவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. குரு வார்த்தை கேட்டு மன்னவனும் - வேள்வி
குறைவின்றி நடாத்தும் வேளையிலே
உருவில் தேவ வடிவினிலே - ஒரு
உத்தமபுருசன் தோன்றினனே

10. கையில் அமுதக் கலசத்துடன் - வந்து
கருணைச் சக்கர வர்த்தியிடம்
வையகம் உய்ய வளம் பெருக - இதோ
வந்த கலசம் எனவழங்க

11. அங்கம் குளிர்ந் தசரதனும் - அதை
அன்போடு வாங்கி மனைவிமார்க்கு
தங்கக்கரண்டியால் தானெடுத்து - அவர்
சரியாகப் பங்கிட்டுக் கொடுக்கையிலே

12. கொஞ்சம் மிகுதி இருந்ததனை - அவர்
கொடுத்தார் கடைசி மனைவியர்க்கு
நெஞ்சம் மகிழ்ந்து புசித்ததினால் - மூவர்
நிச்சயம் கர்ப்பம் ஆயினரே

13. ஆசையுடன் அரி உருமாறி - அவர்
அன்புள்ள ராமனாய்த் தான் பிறக்க
கோசலை வயிற்றில் வந்துதித்தார் - இந்தக்
குவலயம் சிறந்தோங்க வேண்டுமென்று

14. கையிலே உள்ள சக்கரத்தை - அவர்
கடமைதவறா சோதரனாய்
கைகேகி வயிற்றில் வந்துதித்து - நல்ல
காரியம் நிறைவேற்றத் தான்பணித்து

15. சங்கோடு ஆதி கேசனையும் - அரி
தத்துவம்மிக்கத் தம்பிகளாய்
மங்கை சுமித்திரை மணிவயிற்றில் - நீங்கள்
வந்து உதித்திடும் என்றனரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ராமன் பரதன் லெட்சுமணன் - நல்ல
பண்பு நிறைந்த சத்துருக்கன்
சோமன் ஒளிபோல் தான்வளர்ந்து - மற்று
சுந்தர வித்தைகள் கற்கையிலே

17. எத்தனையாகங்கள் செய்தாலும் - அதை
முற்றுமுன் அழிக்கும் அரக்கர்களை
வித்தகன் ராமன்தான் வெல்வானென்று - அந்த
விசுவாமித்திரர் தானறிந்து

18. தசரதன் அரண்மனை தான் நாடி - முனி
தன்னுள்ளக் கருத்தைத் தான்கூற
அசந்து மன்னன் சிலையாகி - அந்த
ஆங்கார முனிக்குத் தான் பயந்து

19. ஐயோ சுவாமி சின்னப்பயல் - ராமன்
அரக்கர் கூட்டத்தை வெல்லமாட்டான்
கையோடு என்சேனை சூழ்ந்துவர - நானும்
கட்டாயம் வருகிறேன் ஆணையிடு

20. ராமனை யாரென்று நீயறியாய் - அவன்
தத்துவம் தன்னையும் நீயுணராய்
ராமன் ஒருவனே அரக்கர்களை - வெல்லும்
சக்தி மிக்கவன் என்றறியாய்

21. அந்தமொழிகேட்டு மன்னவனும் - இனி
ஆவது வேறொன்றும் இல்லையென்று
தந்தேன் ராமன் லெட்சுமணன் - என்று
சாற்றினார் முனிவர் முன்னாலே

22. என்றுமொழிந்த மன்னவர்க்கு - முனி
எல்லாம் பெறுகவென வாழ்த்தி
அன்புக் குழந்தைகாள் பின்னாலே - நீங்கள்
அன்போடு வருக என்றுரைத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. வில்லம்பு கையிலே தானெடுத்து - இளம்
வீரர்கள் முனியின் பின்னாலே
செல்லும் அழகைப் பார்த்திருந்து - அந்த
செங்கதிரோனும் வெற்றியென்றான்

24. அரக்கர் தம்மைக் கொன்றொழித்து - வழியில்
அகலிகை சாபம் தனைப் போக்கி
கரத்தில் வில்லம்பு ஏந்திக் கொண்டு - ராமர்
கட்டளைக்காக காத்து நின்றார்

25. முனிவர் வேள்வியைத் தான்காத்து - அவர்
மூத்தான நல்லாசி பெற்ற பின்பு
இனிநம் சேவை முடிந்ததையா - சுவாமி
இப்போதே நாடு செல்வோமென்றார்

26. இன்னுமோர் வெற்றி இருக்குதடா - ராமா
இப்போதே மிதிலை செல்வோமென்று
முன்னால் முனிவர் வழிகாட்ட - அந்த
மூவரும் அங்கே சென்றனரே

27. ஜனகன் மகளான ஜானகியும் - மேல்
மாடத்தில் நின்று கண்டு கொண்டு
அனைவர்க்கும் மேலான ஆணழகன் - இந்த
அவனியில் யாரோ என நினைக்கக்

28. ராமபிரானதை தானுணர்ந்து - அவர்
சந்தோசமாக மேல் நோக்க
சேர்ந்தன நான்கு கண்களுமே - இனி
சேருவோம் ஒன்றாய் என்பதுபோல்

29. குறிப்பாலுணர்ந்த முனிவருமே - இனி
கூறுவோம் உண்மை என நினைத்து
அறிகுவாய் ராமா வில்லொடித்தால் - நீயும்
அந்தக் கனியையும் கொய்திடலாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. ஆதி சிவனன்று ஜனகனுக்கு - அவர்
அன்பாய்க் கொடுத்த தனுசியிது
பாதியாய் ஒடித்தால் போதுமப்பா - நீயும்
பார்த்தது கைகூடும் பாருமப்பா

31. முனிவர் மொழிந்த மறுகணமே - ராமர்
முன்பின் எதுவுமே பாராமல்
இனிக்கின்ற கரும்பை மதயானை - வந்து
இழுத்து எடுத்துச் சுவைப்பதுபோல்

32. உருக்கமாய் எடுத்து நாணேற்றி - அது
உடனே இரண்டு கூறாக
கருங்கல்லாய் நினைத்த எல்லோரும் - அதைக்
கண்டு ஆனந்தம் கொண்டனரே

33. காத்து இருந்த ஜானகியும் - அவள்
கையிலே மாலையை ஏந்திவந்து
சாற்றினாள் ராமர் புயத்தினிலே - பெரும்
சந்தோஷமிகுதி மேலோங்க

34. சீதையை மணந்த ராமபிரான் - பின்பு
சிறப்போடு வாழ்ந்து வருகையிலே
கோதை கைகேயி வரமதனால் - அவர்
குடும்பமும் தம்பியும் தான்பிரிந்து

35. பதினான்கு ஆண்டு வனவாசம் - செய்ய
பற்றோடு கானகம் செல்கையிலே
விதிவசம் சீதையை இராவணனும் - அன்று
விளையும் தீமை அறியாமல்

36. அலைபாயும் காமத்தால் இராவணனும் - அந்த
அன்னையை மண்ணோடு தான்பேர்த்து
இலங்கைக்குக் கொண்டு வந்தனனே - தன்
இச்சையால் நடப்பதை தான்மறந்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. காடெல்லாம் ராமர் தானலைந்து - அவர்
கடல்கடந்து இலங்கை சென்று
தேடியேராவணன் தனைக் கொன்று - அன்று
சேயிழை சீதையை மீட்டாரே

38. அரக்கர் குலத்தை தானழித்து - அந்த
அம்மையை மீட்டுத் தானெடுத்து
ஒருத்தனுக்கு கொருத்தி என்பதனை - இந்த
உலகுக் குணர்த்தி வைத்தனரே

## 8. பலராம அவதாரம்



01. பலராம அவதாரம் தானெடுத்து - இந்தப்
பாரினில் செய்த புதுமைதனை
நலமான செந்தமிழால் பாட - ஆதி
நாரணா பக்கம் வாருமையா

02. பகைபோல பகைமைக் குணம்படைத்த - இந்த
பாரிலே நேர்மையாய் வாழ்ந்து வந்த
வாசுதேவர் மூத்த மனைவியர்க்கு - அன்று
வந்துதித்தார் பல ராமராக

03. பழுதிலா உழவர் தொழிலோங்கி - அன்று
பாரினில் வந்து அவதரித்து
உழுது கலப்பையை படைக்கலமாய்க் - கொண்ட
உலகேசன் தன்புகழ் பாடிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. தீர்த்த யாத்திரை தானதர்மம் - என்று
திருவுளம் மகிழச் செய்யவென்றும்
சேர்ந்தார்க்குச் செல்லப் பிள்ளையென - அவர்
சென்ற இடமெல்லாம் சிறப்போங்க

05. பற்பல தலங்களும் தான்பார்த்து - அங்கே
பணிந்தார்க்கு நல்லாசி தான்வழங்கி
நற்பேறு என்று அகமகழ்ந்து - அவர்
நாள் தோறும் யாத்திரை செய்கையிலே

06. சந்திர யாகம் செய்வதற்கு - அன்று
சகல ரிசிகளும் ஓரிடத்தில்
வந்து அமர்ந்து இருக்கையில் - அங்கு
வருகிறார் பலராமர் என்றறிந்து

07. ஏதோ நாம் செய்த புண்ணியத்தால் - இந்த
ஏழைகள் யாகம் தழைத்தோங்க
ஆதவன் போலவர் வாறாரென்று - அப்போ
அனைவரும் எழுந்து வரவேற்க

08. எழுந்து எல்லோரும் நமஸ்க்கரிக்க - அங்கே
எல்லா மறிந்த சூதமுனி
எழுந்து நமஸ்க்காரம் செய்யாவிட்டால் - அவர்
என்ன செய்வாரென தான் நினைக்க

09. எண்ண மறிந்த பலராமர் - இவர்க்
ஏனிந்தக் கர்வம் என உணர்ந்து
தன்கைத் தர்ப்பை தனைக் கிள்ளி - அவர்
தலையை அறுத்து விட்டனரே

10. குருவின் தலையறு பட்டதினால் - அங்கு
கூடியிருந்த ரிசிகளெலாம்
தெரியாமல் அவர் செய்த பிழைபொறுத்து - சுவாமி
திரும்பவும் உயிர்பெறச் செய்யுமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. புராணம் பதினெட்டும் நானறிந்தோம் - என்று
பொங்கிய மமதை மேலிட்டால்
சிரத்தையறுத்தோம் சினம்தணிந்தோம் - இனி
சீக்கிரம் முனிவர் எழுந்திருப்பார்

12. உறக்கம் கலைந்து எழுந்தவர் போல் - அந்த
இறுமாப்புக் கொண்ட சூதமுனி
இறைவா உன்னருள் நானறிந்தேன் - என்று
இருபாதம் போற்றிப் பணிந்தனரே

13. நானென்ற மமதையை விட்டுவிட்டால் - பின்பு
நமக்குள்ளே பல ஒளி தான் தோன்றும்
ஏனென்று கேளாமல் எதுவிருப்போ - அதை
எண்ணியுணர்ந்து நடவுமென்றார்

14. அவ்விடம் விட்டு அவர் நடந்து - இன்னும
அனேக தீர்த்தங்கள் தானாடி
எவ்விடம் விருப்போ அங்குதங்கி - அவர்
இன்பமாய் யாத்திரை செய்கையிலே

15. வாதாபி மகனான பல்லவனால் - தினம்
வாடிவதங்கி நலிவு பெற்று
ஆதரவற்ற முனிவரெல்லாம் - நல்ல
அன்பான பலராமர் வருகை கண்டு

16. முன்னோடிச் சென்று வரவேற்று - எங்கள்
வேதனை தீர்த்திட வேண்டுமென்று
அன்போடவர்தம் தாழ்பணிந்து - பின்பு
அங்கு நடப்பதைத் தானுரைக்க


17. பல்லவன்தன்னை நானழித்து - உங்கள்
பயத்தைப் போக்கி வைத்திடுவேன்
நல்லது நீங்கள் போய்வாரும் - நான்
நடப்பதை நடாத்தி வைத்திடுவேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. என்று மொழிந்த பலராமர் - சென்று
எதிர்த்துப் பல்லவன் தனைப் பொருதி
கொன்று அழித்து இடர் நீக்கி - இன்னும்
கோயில் குளமும் தரிசனமும்

19. செய்யவே வந்து அவதரித்த - எங்கள்
கேசவன் அவதாரம் இன்னதென்று
வையகமுன்னோர் உரைத்ததனை - இன்று
வடித்தோம் செந்தமிழ்ப் பாட்டாக

## 9. கண்ணன் அவதாரம்



01. காலம் துபாவரம் முடியு முன்னே - மற்றக்
கண்ணன் அவதாரம் தானெடுத்து
பூலோக தர்மம் காத்தகதை - கூற
புருசோத்தமனே கண்பாருமையா

02. வியாசரால் மொழிந்த பாரதத்தை - அன்று
விநாயகர் எழுதி வைத்ததனை
பிசகாமல் நடத்தி வைக்க வென்று - நம்ம
பித்தனார் மைத்துனர் கண்ணனென

03. தேவகி வாசுதேவர் தம்பதிக்கு - அன்று
செல்வமகனாய் அவதரித்து
ஆவலாய் வெண்ணை திருடியுண்ணை - அந்த
ஆயர்பாடியில் வந்துதித்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. நீல நிறத்தில் திருமேனி - அவர்
நெஞ்சில் திகழும் முத்தாரம்
பாலுண்டவாயும் சிரிப்பழகும் - அதை
பார்ப்பவர் நெஞ்சம் தான்நெகிழ

05. கோபியர் கண்டு அகமகிழ - அவர்
கொஞ்சிக் குலாவி லீலை செய்து
தாலியணைத்துக் கேலிசெய்து - பெரும்
தத்துவ வித்தைகள் தான்புரிந்து

06. தாய் மாமன் கம்சனை வதைசெய்து - மற்ற
கயவர்களெல்லாம் தானொழித்து
வாயினுள் உலகைத் தான்காட்டி - அவர்
வளமாகக் குன்றைக் குடைபிடித்து

07. பாண்டவர் தமக்குத் தூதாக - அவர்
பாவி துரியனைத் தானணுகி
ஆண்டிட நாடுதான் மறுத்தாலும் - இனி
ஆளுக்கோர் வீடும் தான்கேட்க

08. ஊசி குத்த இடமும் இங்கு இல்லை - என்று
இரக்க மின்றி அவனுரைக்க
தாய்மகன் தன்னால் நாடழியும் - என்று
நம்பிக்கையோடு தானுரைத்து

09. பாஞ்சாலி மானமும் தான்காத்து - அவர்
பஞ்சவர் தம்மோடு சகாயமதாய்
அஞ்சாமல் தேர்ப்பாகன் ஆகவந்து - அன்று
அனைவர்க்கும் கீதையை தானுரைத்து

10. பாரதப் போரை முடித்துவைத்து - அவர்
பாரில் கலியன் உதிக்கும் முன்னே
தாராளமாகத் தவமிருப்போம் - என்று
தனிவனம் தேடித் தானமர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. முன்னாளில் வாலி தனைவதைத்த - பாவம்
முடிவுக்கு அதுவும் சரியாக
இன்னாளில் வேடனாய் அவதரித்த - வாலி
எய்திட்ட அம்பினால் கூடுவிட்டு

12. போகிறேன் வைகுந்தம் என்று சொல்லி - அவர்
போய்ச் சேர்ந்த அன்றே கலிபிறக்க
ஆகாத செயல்கள் தலைதூக்க - மண்ணில்
ஆணவம் தலைவிரித் தாடியதாம்

13. கண்ணன் அவதாரம் தானெடுத்து - இந்தக்
காசினி மக்கள் வாழ்வோங்க
எண்ணம் போல் வாழ்ந்த அவதாரம் - என்று
ஏந்திழையே கும்மி கொட்டுங்கடி

## 10. கல்கி அவதாரம்



01. கல்கி அவதாரம் நானெடுப்பேன் - இந்தக்
கலியின் முடிவையும் முடித்துவைப்பேன்
எலாமும் மெய்படி நடக்குமென்று - நானும்
இப்போதே சொல்கிறேன் கேளுமென்றார்

02. எல்லாமே தலைகீழாய் மாறிவிடும் - மண்ணில்
ஏற்றத் தாழ்வும் பெரும் பேதங்களும்
சொல்லாமல் வந்து குடிகொள்ளும் - என்று
தோகையரே கும்மி கொட்டுங்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. ஆறு அறிவு படைத்தாலும் - அது
ஐந்து அறிவாகத் தான்மாறி
வேறு நினைவெல்லாம் தான்தூண்டி - மேலும்
வேண்டாத செயலையும் செய்யவைக்கும்

04. மதகுருமாரை மதிக்கமாட்டார் - இன்னும்
வாயாலே சொல்லம்பு வீசிடுவார்
கதவுடைத் தாலயம் கொள்ளை கொண்டும் - சிலர்
கலகலப்பாகவும் வாழ்ந்திடுவார்

05. வணக்கத் தலங்களும் பொய்யென்று - அங்கு
வணங்கும் தெய்வமும் பொய்யென்று
இணக்கமாய் வாய்வார்த்தை தான்பேசி - அதை
இல்லாமல் செய்யவும் தான்துணிவார்

06. மதம்விட்டு மதம் மாற எண்ணம்வரும் - பின்னர்
மனம்போல வாழத் துணிவுவரும்
பதம்கெட்டபின்பும் பாலுணர்வுவரும் - கேட்டால்
பயித்தியம் போவென்று சொல்லவரும்

07. நல்லோர் பெரியோரைத் தான்மதியார் - சிலர்
நாள்தோறும் வம்புக் கிழுத்திடுவார்
வல்லமையுள்ளவன் தான்தலைவன் - என்று
வாய்வார்த்தைபேசி உயர்ந்திடுவார்

08. மண்மேலே ஆசை அதிகம் வைப்பார் - தம்மை
மண்ணுண்ணும் என்பதை தான்மறப்பார்
பொன் பொருள் தேடிப் புதைத்திடுவர் - பலர்
போதாது என்று அலைந்திடுவார்

09. அடுத்தவன் சொத்துக்கு ஆசைவைப்பார் - அதை
அடையாமல் போனாலே மோசம் செய்வார்
படுக்கையிலே கொலை செய்திடுவார் - வேறு
பாதகம் செய்யவும் அஞ்சமாட்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மாற்றான் மனைவிக்கு ஆசைவைப்பார் - சிலர்
மனைவி மக்களைத் தள்ளிவைப்பார்
பற்றற்று பலபேரைத் தான்புணர்ந்து - பின்பு
பாழான நோயால் வருந்திடுவார்

11. முறையற்ற உறவெல்லாம் தலைவிரித்து - வந்து
மூர்க்க குணத்தோடு ஆடிநிற்கும்
அறையிலே பலமாதர் சில ஆண்கள் - என்று
அற்பசுகம் காண வேண்டிவரும்

12. பொய்யும் கொலையும் அதிகரிக்கும் - இன்னும்
போதாக்குறைக்கு கற்பழிப்பும்
மெய்யாக இம்மண்ணில் ஓங்கிநிற்கும் - பின்பு
மேதினி வாழ்வே வெறுத்து விடும்

13. கொடுத்த கடன்கேட்க அஞ்சிடுவார் - கேட்டால்
கொலை செய்வானென்று பயந்திடுவார்
நடுநீதீ சொல்ல வருவோர்க்கு - இனி
நாக்கு இருக்காது என்றிடுவார்

14. உண்ணும் உணவிலே நஞ்சுவைப்பார் - அதை
உண்டு இறப்பதைத் தான்ரசிப்பார்
எண்ணமே நஞ்சாகத் தான் சுமந்து - சிலர்
எண்ணற்ற கொடுமைகள் செய்திடுவார்

15. தர்மத்தின் தேவதை தலைசாய்வாள் - இனி
தன்வேலை முடிந்தது என்றிடுவாள்
அதர்மத்தின் தலைவன் தலை தூக்கி - இந்த
அகிலமே என்னாட்சி என்றிடுவான்

16. மாரிபொழிய மறுத்துவிடும் - மக்கள்
வாழ்க்கையில் திண்டாடவேண்டி வரும்
ஏரியும் நீரின்றிக் காய்ந்து விடும் - பின்னர்
எங்கே நீர் என்றுமே தேடவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. இயற்கை அனர்த்தம் மிகவோங்கும் - மக்கள்
இருந்தாப் போல் இல்லாது போகவரும்
வியப்பென்று அதனையும் நினையாமல் - மக்கள்
விருப்பம்போல் வாழத் துணிவுவரும்

18. பாலும் சிகப்பாகக் கறந்தாலும் - மக்கள்
பார்த்து வியப்பாகத் தானிளையார்
காலத்தின் கோலம் என்று சொல்லி - அதை
கட்டாயம் உண்ணத் துணிந்திடுவார்

19. உருவத்தில் கல்லாய் இருக்கும் சிலை - எல்லாம்
உயிர் பெற்று வாய்விட்டுப் பேசிடுமாம்
மிருகமும் வாய்விட்டுப் பேசிடுமாம் - அது
விளக்கமாய் உண்மையும் சொல்லிடுமாம்

20. கலியின் முடிவிப்போ வந்ததென்று - நம்மை
காக்கும் பரந்தாமன் கருணை கொண்டு
பலி கொள்ள அவதாரம் எடுப்பாராம் - இந்த
பாரின் கொடுமையைத் தான்களைய

21. கழுத்துக்குமேலே பரிமுகமும் - மற்றக்
கைகால்கள் எல்லாம் மனிதனுமாய்
வழுவாத மனுநீதி உள்ளோர்க்கு - அவர்
வந்து மழலையாய் தானுதிப்பார்

22. அப்போதே அதிசயம் தானடக்கும் - இந்த
அவனியே அலையாட்டம் ஆடிநிற்கும்
எப்போதும் இவைகள் நடப்பதென்று - மக்கள்
ஏறிட்டும் பாராமல் தானடப்பார்

23. என்றாலும் கலியைத் தான்முடிக்க - அரி
எடுத்த அவதாரம் தான்பலிக்க
இன்றல்ல நாளை என நினைத்து - அவர்
ஏற்றதொரு நாளை பார்த்திருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. வருணபகவான் இதைக் கண்டு - நான்
வாரிச் சொரிகிறேன் என்று சொல்லி
பெருவெள்ளம் பொங்க மழை பொழிந்து - அவர்
பேர்த்து உருட்டி மகிழ்ந்திடுவார்

25. வாயு பகவானும் மனமகிழ்ந்து - தன்
வலுவிலே ஓர்பங்கை தான்காட்டி
மாய்கின்ற மாந்தர் துயர்கண்டு - அவர்
மகிழ்ச்சியால் ஆனந்தக் கூத்தாட

26. ஆறும் கடலும் பொங்கிவரும் - அப்போ
அதிர்ச்சியால் பூமியும் தானடுங்கி
கூறாகப் பிளந்து போகையிலே - அதில்
கூட்டோடே உயிரினம் தான்மறையும்

27. ஊழி முடிவு வந்தவுடன் - இந்த
உலகமே நீரில் மூழ்கையிலே
ஆழியில் துகிலும் மாயவனும் - ஒரு
ஆலிலை மேலே அமர்ந்திருப்பார்

28. அன்போடுபக்தி கொண்டவர்கள் - அந்த
ஆலிலை பக்கமே தான்சேர
பண்பற்றோர் எல்லாம் பரிதவித்து - அப்போ
பாழும் உடம்பெல்லாம் விட்டுவிட

29. எல்லாமும் எந்தன் விளையாட்டு - இதில்
ஏதோவோர் பேதமும் இல்லையென்று
நல்லபடியவர் யுகம் முடித்து - இந்த
நானிலம் தன்னையே காத்திடுவார்

30. விஷ்ணுவின் பத்து அவதாரம் பற்றி
விபரமாய் அறியாமல் போனாலும்
இஷ்டமுடன் இதை நாம்படித்து - இப்போ
இருப்பதை அறிந்து கொள்வோமென்று




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. அறிந்தவகையில் நான்படித்து - அவர்
அவதாரம் பத்தையும் செந்தமிழால்
சிறந்த கும்மிப் பாட்டாக - இப்போ
செப்பினேன் என்மேல் குறை பொறுப்பீர்

32. முன்னோர் மொழிந்த நூல்களெல்லாம் - நான்
முற்றும் படித்து அறிந்த தில்லை
என் கையில் கிடைத்த சிறு நூலால் - இதை
எழுத வேண்டு மென நினைத்து

33. முத்தான செந்தமிழ்ப் பாட்டாக - என்னால்
முடிந்த அளவு வடித்தெடுத்து
தந்துள்ளேன் என்மேல் குறை பொறுப்பீர் - என்று
தலை தாழ்த்தி மன்றாடி வேண்டுகின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வெளியீடுகள் இதுவரை

01. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் பொன்னூஞ்சல் வைரவர் அகவல்.

02. அம்மன் அருட்பாதங்கள், ஆதிசிவன் அருட் காவியம்.

03. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் பத்து, மயானப்பத்து.

04. சேனைக்குடியிருப்பு முத்துவிநாயகர் பெயரில் கண்கொடுத்த கற்பகப்பத்து, திருக்குமரன் வரமருள் பத்து.

05. ஆழிப்பேரலையின் அனர்த்தக் காவியம்.

06 கதிர்காமக் கந்தன் பெயரில் வழிநடைப்பத்து, வழிநடைக்கும்மி.

07. கிட்டங்கிப் பிள்ளையார் பெயரில் பொன்னூஞ்சல்.

08. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் ஊர்வலக் கும்மி.

09. துறைநீலாவணை கண்ணகையம்மன் ஊர்வலக் கும்மி.

10. கதிர்காமக் கந்தன் பெயரில் வழிநடைப்பத்து, வழிநடைக்கும்மி.

11. தசாவதாரம் கும்மிப் பாடல்கள்

இவைகளையெல்லாம் நூல்வடிவமாக்க எனக்கு உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

Brilliant Printers - Kalmunai - Tel 0672229778

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org